




‘கோட்டை’ என்று பெயரிடப்பட்ட அந்த அற்புத கால வாகனம் பிரபஞ்சங்கள் பலவற்றையும் மின்னல் வேகத்தில் கடந்து, நிகழ்காலத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது! அதனை இயக்கிக் கொண்டிருந்தவர்களோ - நம் தோழர்களான இரும்பு மனிதன் ஆர்ச்சியும், விக்டரும், தாம்சனும்தான்! திடீரென நண்பர்களுக்கு எதிர்பாரா பிரச்சனை ஒன்று முளைத்தது!
1970
1980
2050
அடேய் ஆர்ச்சி மடையா! வருடக் கட்டுப்பாட்டு இயக்கம் செயலிழந்து விட்டது! ஏதாவது ‘சட்’ டென்று செய்து தொலை!
அவன் கவனத்தை திசைதிருப்பாதே விக்டர்! இயக்கத்தை ஆர்ச்சியிடமே விட்டு விடு!
விக்டர் ஒரு விசையைப் பற்றி இழுக்கவும், கலம் பேரிரைச்சலுடன் அதிரத் தொடங்கியது!
இடியட்! என்ன செய்கிறாய்?
புரட்சித் தலைவன் ஆர்ச்சி
அதிர்ச்சியின் விளைவாக, கலம் தரையிறங்கத் துவங்கியது-
ஒரு வழியாக தரை-யைத் தொடப் போகிறோம்!
எந்த வருடத்தில் இருக்கிறோம் என்பதோ எங்கே இறங்கப் போகிறோம் என்பதோ தெரியவில்லையே!


கோட்டையின் கதவைத் திறந்து வெளியே வந்தது ஆர்ச்சி!
இதென்ன கண்ருவி? ஏதோ ஒரு கானகத்தினுள் வந்து இறங்கியிருக்கிருேம்!
எனக்கென்னவோ இது பூமி தானு என்பதே சந்தேகமாய் உள்ளது!
DAILY MIRROR
பரிச்சயப்பட்ட பொருள் ஒன்றை சுட்டிக் காட்டியது ஆர்ச்சி-
ஆர்ச்சி கண்டு பிடித்து விட்டது! இது இலண் டன் நகரத் தபால் பெட்டி!
அடக் கடவுளே- அவன் சொல்வது நிஜம்! இது இ- இலண்டன் தான்!
இத்தனை கொடிகளும், மரங்களும் எங்கிருந்து வந்து சேர்ந்தன- புரியவில்லையே!
கொஞ்ச தூரம் சென்றனர்-
ஆள் நடமாட்டமே தெரிய வில்லையே! இது இலண்டனு- ஆப்பிரிக்கக் கானகமா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது!
இலண்டன் இவ்வளவு உஷ்ண மாக ஒருபோதும் இருந்தது கிடையாதே! இங்கு என்ன தான் நடக்கிறது?



உபயோகத்தில் இல்லாத பல அடுக்கு கார் பார்க் கட்டிடத்தின் முன்னால் நின்றது ஆர்ச்சி—
மேலே ஏறி நின்று சுற்றிலும் நோட்டம் விடுவோம்!
நல்ல யோசனை! இந்த லியானா கொடி நம் எடையை தாங்குமா என்று பார்-
வேகமாக ஏறி வர ஒத்தாசை செய்–ஆர்ச்சி இந்த அதீத வெப்பத்திற்கு பழக்கப்பட்டவர்களல்ல நாங்கள்—
PARK
கீழே பார்க்காதே, தாம்சன்- பயத்தில் பிடியை விட்டு விடுவாய்!
கொஞ்சமும் நம்ப முடியாத, புதிரான காட்சி எதிரே விரிந்தது—
பிரமையா - இல்லை- கனவு காண்கிறேனா?
தேம்ஸ் நதியில் நீர் யானைகள் கும்மாளம் போடுகின்றன - கோபுர உச்சியிலிருந்து பிணம் தின்னிக் கழுகுகள் மேலெழும்பிப் பறக்கின்றன - நம் கண்களில் தான் கோளாறு?


எதிர் காலத்தில் இலண்டனின் நிலே இது என்று தோன்றுகிறது, தாம்சன்! இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது எது அல்லது யார்? நகர மாந்தர் என்ன ஆனூர்கள்?
ஊஹூம்- ஆர்ச்சியும் அம்பேல்!
ARCH
ஆர்ச்சியை கேட்டுப் பார்-கம்ப்யூட்டர் மூளே அவனுக்கு!
அப்போது, கீழே சற்றுத் தொலேவில் யாரோ நகர்வது தெரிந்தது—
அதோ—அங்கே ஜனங்கள் தென்படுகிருர்கள்!
ஆமாம் ஆர்ச்சி! அவர்களே பிடித்து விசாரித்தால் விபரம் தெரிந்து விடும்— வாருங்கள் போகலாம்!
வலுவான லியானு கொடி ஒன்றைப் பற்றியவாறு சரிந்து இறங்கியது ஆர்ச்சி-தோழர்களோடு!
நொடியில் கீழே போய் விடலாம்!
எலும்பு நொறுங்காமல் போய்ச் சேர்ந்தால் சரிதான்!


சப்தம் கேட்டு அந்த நபர்கள் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்-
அங்கே பார்! சூப்பரான் ஏஜெண்டுகள்-நம்மைக் குறி வைத்து வருகிறார்கள்! விடாதே-சுட்டுத் தள்ளு!
தப்பியோடுங்கள்-நான் அவர்களை தேக்கி நிறுத்தி வைக்கிறேன்!


விக்டரும், தாம்சனும் தரையோடு தரையாக படுத்துக் கொண்டு விட்டனர்.
அவன் எங்களை தீர்த்துக் கட்டுமுன், விரைந்து போய், அவனை அடக்கு-ஆர்ச்சி!
யாரும் நம்மை வரவேற்கத் தயாரில்லை, இங்கே!


தோட்டாக்கள் துளைக்க முடியாத கட்டுமானம் கொண்ட ஆர்ச்சி நெருங்கிச் சென்று, தன் டெலஸ்கோப் கரத்தை நீட்டியது-
சூப்பரான் சைத்தானே- கிட்டே வராதே! ஆ-ஐயோ!
அடித்துப் போட்டு விடாதே ஆர்ச்சி-, துப்பாக்கியைப் பிடுங்கு போதும்!
பயத்தில் உறைந்து போய்விட்டான்- பயல்!
ஆர்ச்சி அவனை பற்றி நிறுத்த முனைந்த கணத்தில்—
க்ர்ர்ர்...
புலி! ஆர்ச்சியை அறைகிறது!
இங்கே எல்லாமே விபரீதமாகத்தான் நிகழ்கிறது!


தோழர்கள் எண்ணியதை விட படுபயங்கர நிலை உருவாகிக் கொண்டிருந்தது-இரண்டு தெரு தள்ளி-எதிரே தென்பட்ட அனைத்து உயிரினங்களையும், நெருக்கித் தள்ளியவாறு, அலட்சியமாக முன்னேறி நகர்ந்து வந்தது ராட்சஸ விந்தை உருவம் ஒன்று—


அந்த திடீர் தாக்குதலால், முதலில் நிலைகுலைந்து போன ஆர்ச்சி சட்-டென்று சுதாரித்துக் கொண்டு விட்டது.
அவன் போய்த் தொலையட்டும்! இந்த சைத்தானைக் கவனி-சீக்கிரம்! டெலஸ்கோப் கரத்தை பின்னால் கொண்டு வா.
புலியை சமாளிக்க ஆர்ச்சி அதிக சிரமமோ, நேரமோ எடுத்துக் கொள்ளவில்லை!
பிடியை விட்டு விடாதே-எங்களை கிழித்துப் போட்டு விடும்!
ஆர்ச்சியின் உடம்பு உறுதியான உலோகத் தகடுகளால் ஆனது என்பதால் அதனிடம் புலியின் பாச்சா பலிக்கவில்லை!


புலியை ஒரு சுழற்று சுழற்றி வீசியெறிந்தது ஆர்ச்சி.
தொலைந்தது சனியன் — தோழர்கள் இனி கவலை கொள்ளத் தேவையில்லை!
மறுகணம்—அங்கே பல்வேறு விலங்குகள் நெருக்கியடித்துக் கொண்டு ஓடி வரவே, சட்டென்று தோழர்களை பிடித்து இழுத்து, ஓரமாக கொண்டுபோய் நிறுத்தியது, ஆர்ச்சி.
இங்கே-இப்படி பத்திரமாக நின்று கொள்வோம்!
என் இப்படி தலை-தெறிக்க ஓடி வரு-கின்றனவோ — தெரியவில்லையே!


மிரண்டோடிய மிருகங்கள் அவர்களை கண்டு கொள்ளவே இல்லை—
எதையோ கண்டு மிரண்டு ஓடுகின்றன-நம்மைப் பார்த்து அல்ல!
எனக்கும் அச்சமாக இருக்கிறது-இங்கே நடப்பது எதுவுமே இயற்கையாக இல்லை!
ARC
இனியும் இங்கே இருப்பது ஆபத்து! விலங்குகளை அச்சுறுத்துவது இங்கே வந்து கொண்டிருக்கக் கூடும்!
ஐயோ! அது என்ன-?!
வாருங்கள்-ஓடிப் போய் ஒளிந்து கொள்வோம்! ஆர்ச்சி-அந்தக் கதவை திறந்து விடு!
ஆனால்-ஏற்கனவே காலம் கடந்து விட்டிருந்தது-அபரிமிதமான பளு காரணமாக நடைபாதை தளக்கற்கள் நொறுங்க, ராட்சஸ உருவம் ஒன்று அங்கே ஊர்ந்து வந்தது—


அதை இயக்குவது யாராக இருக்கும்? ஆர்ச்சி போல அதுவும் ஒரு ரோபோவாக இருக்கலாம்! ஆனால்-
ஆர்ச்சி துணையிருக்கையில் தோழர்கள் மனம் தளரலாமா?
உருப்படியாக திரும்பிச் செல்வோமா- சந்தேகம் தான்!
ராட்சஸப் புழு விலகிச் சென்றதும்-
பதுங்கிக் கிடக்கும் மனிதர்களின் மறைவிடத்தை கண்டு பிடித்து விட்டோம் என்றால் அவர்களிடமிருந்து என்ன விவகாரம் என்று கேட்டு அறிந்து கொள்ளலாம்!
அந்த நபர்கள் ஓடிய வழியைப் பின்பற்றி ஓடினார்கள்—
இந்த சாக்கடை மூடியை சுற்றி புற்கள் சிதைந்து கிடக்கின்றன-மூடியை அகற்றினால் விஷயம் தெளிவாகலாம்!


தன் மின் காந்த அமைப்பை இயக்கியது ஆர்ச்சி—
சுலபமாக அகற்றி விடலாம்-இப்படி!
நான் சொன்னது சரியாகி விட்டது! உபயோகத்தில் இருப்பதனாலான பளபளப் போடு, இரும்பு படிகள் கீழ் நோக்கிச் செல்கின்றன—


அந்தக் காற்றுப்போக்கி வழியே கீழே இறங்கினார்கள்-
இது ஒரு குகைப் பாதை! ஜனங்கள் இங்கே பூமிக்கு அடியில் பதுங்கி வாழ் கிறார்கள் போலும்!
முன்பு அவர்கள் நம்மை எதிர்கொண்டபோது, சுட்டுக்கொல்ல முயன் றதை மறந்து விடாதே!


அப்போது திடீரென்று எழுந்த பேரிரைச்சல் குகையினுள் எதிரொலித்தது—
விக்டர் - பாதாள ரயில் வருகிறது! ஒதுங்க இடமே கிடையாது- தொலைந்தோம்!





சட்டென்று, தோழர்களின் பின்னால், ஏதோ பளிரிட்டது—
ஆர்ச்சி ஏதாவது செய்-எங்களைக் காப்பாற்று!
குறுகிய மின் வட்டத்தை ஏற்படுத்தி, ப்யூஸை கெடுத்து விட்டது-ஆர்ச்சி! இரயில் இயக்கமிழந்து போய்விடும்!
ஸ்ஸ்ஸ்ஸ்
எஞ்சினின் இயக்கம் நின்றுவிட்ட போதிலும், மட்டுப்பட்ட-வேகத்தில் தொடர்ந்து முன்னேறி வந்தது ரயில்—
மயிரிழையில் தப்பி விட்டோம்!
டெலஸ்கோப் கரத்தை தடையாக்கி, தன் சக்தி முழுவதையும் பிரயோகித்து ரயிலை நிறுத்தி விடும்-ஆர்ச்சி!
சாதித்து விட்டாய்-ஆர்ச்சி! பக்கத்துஸ்டேஷனுக்கு ரயிலை தள்ளிக் கொண்டு போ-அங்கே யாரையாவது சந்திக்க முடியுமா-பார்ப்போம்!
நம்மை நசுக்கி கொல்லவே இரயிலை இயக்கி அனுப்பியிருக்கிறார்கள். எதைக் கண்டோ அவர்கள் மிரண்டு போயிருப்பதாக தெரிகிறது!




காலி எஞ்சின் ஓரளவு சிதிலமடைந்து கிடந்த ஸ்டேஷனை சென்றடைந்தது-
WAY OUT STREET ONLY
அதோ இருக்கிறார்கள்! விரட்டிப் பிடி ஆர்ச்சி!
அவர்களிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்.
பின்னாலிருந்து சில நபர்கள் தோன்றினர்-
நம்மை எதிரிகளாக கருதுகிறார்கள் தாம்சன், பதுங்கிக்கொள்!
ரட்டட்ட!
ரட்டட!
சூப்பரான ஏஜெண்டுகள் விடாதே- தீர்த்துக்கட்டு!


காந்த அலை தந்திரத்தை பயன்படுத்தி அவர்களுடைய ஆயுதங்களை பிடுங்கு ஆர்ச்சி-
ஸ்ஸ்ஸ்...
ஸ்ஸ்ஸ்...
தோட்டாக்கள் உராய்ந்து கொண்டு போகின்றன. சீக்கிரம் ஆகட்டும்!
மறுகணம் ஆர்ச்சி வீரியம் மிக்க மின்காந்த சக்தியாக மாறியது...
வாருங்கள் ஆர்ச்சியிடம்!
யாயா ஆ-வ்!
தாமசன்! அவர்களிடமிருந்து துப்பாக்கிகளை பறி! இது-தான் சந்தர்ப்பம்!
18


ஆர்ச்சி தன் மின் காந்த அமைப்பை அணைத்ததும்–
நாங்கள் நண்பர்கள்தான்! நான் ஆர்ச்சி - ஆற்றல் மிக்க இயந்திர மனிதன் உடனிருக்கும் விக்டரும் தசம்சனும் உங்களைப் போல் மானிடர்களே!


அதையடுத்து-
விண்வெளியிலிருந்து பூமிக்கு வந்த ஆக்கிரமிப்பாளர்களோடு வந்த ரோபோக்கள்தான் இந்த சூப்பரான்கள்.. எதிரிகளுக்கு நம்சீதோஷ்ண நிலை ஒத்துக் கொள்ளாததால் திரும்பிச் சென்று விட்டனர்-ரோபோக்களை இங்கேயே விட்டுவிட்டு!
மக்களை அடிமைப்படுத்த பலப் பிரயோகம் செய்யும் இந்த சைத்தான்களை சமாளிக்க முடியாமல் இப்படி ஒளிந்து வாழ்கிறோம்...
நம்மை விட பன்மடங்கு விஞ்ஞானத்தில் முன்னேறிய இந்த சூப்பரான்–கள் இப்பொழுது சர்வாதிகாரம் செய்கின்றன. அவற்றிற்கு ஒத்து வரும் சீதோஷ்ணத்தை கொண்டு வர ஒரு செயற்கை சூரிய ஒளியும் படைத்துள்ளன!
ஓகோ! விஷயம் இப்படித் தானிருக்கும் என்று ஆர்ச்சி நினைத்தது!


அப்போது-மேலேயிருந்து ஒலக் குரலில் எழுந்தது ஓர் அபாய எச்சரிக்கை...
ஓடி. ஒளிந்து கொள் ளுங்கள்.சூப்பரான் துருப்புகளை ஏற்றி வரும் வாகனம் இங் கே வந்து கொண்டிருக்கிறது




பூமிக்கு அடியில்-
ஏன் இப்படி தலைதெறிக்க ஓடுகிறார்கள் ?
அந்த மைக்கில் வந்தசெய்தியை நீ கவனிக்கவில் லையா? சூப்பரான் கள் இங்கேவந்து கொண்டிருக் கிறார்களாம்!
ஓடு...!
ஐயோ . !
பிடி-ஓட்டம்!


மின்னல் வேகத்தில் பாய்ந்து ஓடியது ஆர்ச்சி ..
யார் இந்த குப்பரான்கள், ஆர்ச்சி போய் ஆராயப்போகிறது......
வேண்டாம் நில் ஆர்ச்சி!
AR
பெரிய ஹீரோன்னு மனதுக்குள்ளே நினைப்பு அவனுக்கு! தடுத்து நிறுத்து-விக்டர்!
தாம்சனின் டிரான்ஸ்மிட்டர் விடுத்த சமிக்ஞைகளை வேண்டுமென்றே புறக்கணித்தது ஆர்ச்சி ..
வேண்டாம் நிறுத்து! ஏன் அந்த இரும்புத் தட்டியை பிய்த்து எடுக்கிறாய்?
தெருவுக்குச் செல்ல குறுக்கு வழியை உண்டு பண்ணு கிறான், அந்தக் கோமாளி!


வேண்டா வெறுப்பாக தோழர்களும் ஆர்ச்சியை பின் தொடர்ந்து வெளியேறினர் ..
மறுபடியும் அந்த பயங்கர கம்பளிப் புழு சைத்தான்!
அது ஓர் இயந்திரப் பொறி. சூப்பரான் துருப்புகளை ஏற்றி செல்லும் வாகனம்! அந்தக் கண்கள் சக்தி வாய்ந்த லென்சுகளாக இருக்கலாம்!
உலோக இடுக்கிகள் மெதுவாக முன்னால் நீண்டன...
நம்மை நோக்கித்தான் நீள்கின்றன ...


அகப்பட்டுக் கொண்டால் தொலைந்தோம்!
ஓடி வா ஆர்ச்சி
23


மூவரும் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்... ஆனால்-
ஹே! எங்கே அந்தப் பக்கமாக ஓடுகிறாய்!
ஏதாவது அடாவடியாக செய்து மாட்டிக் கொள்ளாதே!


அருகேயிருந்த பழைய டெலிபோன் கூண்டை தூக்கியது ஆர்ச்சி-
என்ன செய்யப் போகிறாய் . ?
விசையோடு எறிந்தது ஆர்ச்சி-
ஆயாயா ஹீஈஈ!
தொலைந்து போ சைத்தானே!
என்னவாகுமோ- தெரியவில்லை!
கண்ணாடிகள் நொறுங்கி சலகலவென்று உதிர்ந்தன ...
ஆர்ச்சி சமர்த்து. என்றைக்குமே குறி தப்பியதில்லை!-டி.வி லென்ஸை நொறுக்கியாயிற்று! சைத்தானால் இனி பார்க்க முடியாது
ஆமாம்! அப்படித் தான் தோன்றுகிறது!
தோழர்கள் மிரட்சியோடு விலகி நிற்க ஆர்ச்சி நெருங்கிச் சென்றது —
இடுக்கி, ஆர்ச்சியை பற்றிக்கொண்டு விட்டது.


மறுகணம் ஆர்ச்சி தன் அபரிமிதமான ஆற்றலை ஒன்று திரட்டி ஒரு முயற்சியை மேற்கொண்டது
பலே ஆர்ச்சி-விடாதே!
இயக்கத்தில் கோளாறு ஏற்பட்டு செயலிழந்து நின்றுவிட்டது அந்த ராட்சஸ பொறி.
ஆர்ச்சியிடம் உன் பாச்சா பலிக்காது அப்பனே!
KEEP LEFT
ராட்சஸ பொறியின் கதவுகள் சட்டென்று திறந்து கொண்டன
ஆர்ச்சி, தாம்சன், விக்டர்! ஜாக்கிரதை! இவைதான் சூப்பரான்கள் அதிரடி படைப்பிரிவு!
இவற்றை சமாளிக்க முடியாது நம்மால் விலகிச் சென்று விடுவதுதான் புத்தி-சாலித்தனம்...
பயல் என்ன செய்ய தீர்மானத்திருக்கிறனோ தெரியவில்லை?


ஒரு விளக்கு கம்பத்தை பிடுங்கி எடுத்தது ஆர்ச்சி...
ரோபோ சரணடைந்து விடு! இல்லையேல் அழித்து விடுவோம்!
என்னைவிட்டால் தோழர்களை யார் காப்பாற்றுவார்கள்? போங்கள்... அப்பால்!
அப்போது திடீரென்று ஏதோ பளீரிட்டது...
விளக்குக் கம்பம் உருகி இரு துண்டங்களாக கீழே விழுந்ததைத்- தொடர்ந்து-
ஆ ஆ ஆ...!
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்!
சக்திவாய்ந்த கதிர் வீச்சு அது என்று நினைக்கிறேன்!
எச்சரிக்கையை அலட்சியம் செய்தாய்! பலனை அனுபவி!


ஆர்ச்சியின் ஜெட் அமைப்பு வெடித்துவிட்டது போல் தோன்றுகிறது ...
தறிகெட்டுப் பறந்த ஆர்ச்சி, ஒரு மேல்மாடி கூரை-யினுள் போய் தலை குப்-புற செருகியது...
நம்மைக் காப்பாற்ற எண்ணி தன்னையே தியாகம் செய்து விட்டது...
இலக்கின்றி, ஆனால் வேகமாக ஓடலாயினர் ...
கோட்டையை சென்றடைய முடிந்தால் ஒரு வேளை தப்பிக்க வாய்ப்பு கிடைக்கலாம்! ஆனாலும் ஆர்ச்சியை இப்படியே விட்டுச் செல்ல இன்னமும் எனக்கு சம்மதம் இல்லை!
அப்படி சுலபமாக இங்கிருந்து தப்பிச் சென்றுவிட முடியாது போலிருக்கிறது... அங்கே கவனி!
மெதுவாக நகர்ந்து வந்த பொறி, ஒன்றிலிருந்து அவசர செய்தி ஒலிபரப்பாகியது ...
சூப்பரான் ஏஜெண்டுகளுக்கு அழைப்பு. மானிட எதிரிகளை அழிக்கவும்.. ZX-I பகுதியினுள் பிரவேசித்து இருக்கிறார்கள்.. !


ஆர்ச்சியை கண்டுபிடிக்காமல் நாம் கிளம்பக்கூடாது .. அத்தோடு என் கண்களால் பார்த்தாலன்றி அது அழிந்துவிட்டதாக ஒத்துக் கொள்ள மாட்டேன்!
வேகமாக ஓடி வா... அவர்கள் கண்ணில் பட்டால் நம் சரித்திரம் முடிந்துவிடும்!
தடைகளை அழித்து விலக்கி வேகமாக முன்னேறி வந்து கொண்டிருந்தன சூப்பரான்கள்...
அவசரம்! அவசரம்! உடனடி நடவடிக்கையில் இறங்குமாறு அனைத்து சூப்பரான்களுக்கும் உத்தரவு!
ZX-1 பகுதியினுள் நடமாடுகிறார்கள் எதிரிகள்...
கட்டிடத்தின் மேல் போய் விழுந்த ஆர்ச்சியின் கதி மற்றவர்கள் நம்பியதுபோல் அத்தனை மோசமல்ல
சூப்பரான்களை குயுக்தியாக ஏமாற்றி ஆர்ச்சி அழிந்து விட்டதாக நம்ப வைத்து விட்டாயிற்று!


நிதானமாக தரையிறங்கியது ஆர்ச்சி ..
தோழர்களை தேடிக் கண்டு பிடிக்க. வேண்டும்-மிகுந்த எச்சரிக்கை தேவை!
இந்தக் கட்டிடத்தின் கூரையின் மீதுதான் ஆர்ச்சி இறங்கியது
அங்கே, எதிரே தெரியும் பொறியை கவனி .. விஷமத்தனமாக தோற்றமளிக்கிறது!
எவ்வித முன்னறிவுப்புமின்றி சட்டென்று சுழன்றது அந்த பொறி...
ஜாக்கிரதை நான் எச்சரித்தேன் அல்லவா?
மாட்டிக்கொண்டோம் எக்கச்சக்கமாக!



மறைவிலிருந்து வெளிப்பட்டன ரோபோக்கள்...
சூப்பரான் ஏஜெண்டுகள் நாங்கள்!
விக்டர் . எங்கிருந்து முளைத்தன இந்தப் பிசாசுகள்!
ஆர்ச்சி நம் அருகில் இருந்திருந்தால் இக்கதி ஏற்பட்டிராது நமக்கு!
தோழர்கள் எண்ணியதைவிட மிக அருகில் தான் இருந்தது .. ஆர்ச்சி!
நடங்களடா மானிட ஜென்மங்களா! சூப்பரானின் அடிமைப் பட்டாளத்தோடு சேர்ந்து கொள்ள வாருங்கள்!
'வெப்பக்கத்தி'யினால் உலோக தகட்டை இப்படி சுலபமாக வெட்டி எடுக்க ஆர்ச்சியை தவிர யாரால் முடியும்?
ஸ்ஸ்ஸ்


தான் ஏற்படுத்திய துவாரத்தின் வழியே வெளிப்பட்டது ஆர்ச்சி ..
அவர்களைப் பின் தொடர வேண்டும் இரகசியமாக ஆனால் ஏதோ ஆபத்து நெருங்குவதாக குறு குறுப்பு ஏற்படுகிறதே?
மின்னல் வேகத்தில் உலோகத் தட்டை சுழற்றி எறிந்தது ஆர்ச்சி ..
என்னிடமா வம்பு பண்ண 'நினைக்-கிறாய்? தொலைந்து போ!
டமால்!
அருமையான பட்டாசு வேடிக்கை..! பார்த்துக் களிக்க சிறுவர்கள் தான் அருகில் இல்லை!
இதற்கிடையே ...
ஒளிந்து வாழ்ந்த மானிடர்களை பிடித்து விட்டோம்! சங்கிலியால் அனைவரையும் பிணைத்து, ஆற்றின் வழியாக நம் திறன் உற்பத்தி கூடத்துக்கு இட்டுச் செல்லுங்கள்
நாமும் அடிமைகளோடுசேர்ந்து கொள்ளப்போகிறோம்!


சில நிமிடங்களுக்குப்பின் —
இப்படியொரு அவலம் நமக்கு சம்பவிக்குமென்று நான் கனவு கண்டதுகூட இல்லே...எல்லாம் அந்த ஆர்ச்சியால் வந்தவினே!
சவுக்கை தாராளமாக பயன்படுத்து . !
ஆர்ச்சியை குறைகூறி என்ன ஆகப்போகிறது நாம் மீண்டும் அதை பார்க்கப் போவதில்லே!
ஆர்ச்சியை சிலவேளேகளில் கட்டுப்படுத்தும் டிரான்ஸ் மிட்டர் தாம்சனின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்தது அது இப்போது திடீரென்று இயங்கத் தொடங்கியது...
ஹே. விக்டர்-ஆர்ச்சிதான் மோர்ஸ் முறையில் சமிக்ஞை அனுப்புகிறது. அதற்கு எந்த ஆபத்தும் இல்லே— நாமும் வாழ்நாள் முழுவதும் அடிமையாக காலம்கழிக்கவேண்டாம்!
அவசரப்படாதே இன்னமும் நாம்எதிரிகளின் பிடியில் இருக்கிறோம் என்பதை மறந்து விடாதே!


ஒரு சூப்பரான் திடீரென்று மறுபுறம் திரும்பிநோக்கியது
அந்த சைத்தான்எங்கே போகிறது— ஆர்ச்சி அனுப்பிய சமிக்ஞை அதற்கும் புரிந்து விட்டிருக்குமோ?
அப்படித்தான் தோன்று கிறது... சமிக்ஞையை பின்பற்றிச் சென்று ஆர்ச்சியின் மறைவி டத்தை கண்டுபிடித்து விடக்கூடும்!
அவர்கள் சந்தேகப்பட்டது, சரியாகிப்போனது...
அதீத திறன்கொண்ட அழிவுக் கதிர் வீச்சு ஆர்ச்சியை குறிவைத்தது...
அன்னிய ரோபோ கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது...! இதோ அழிவுக்கதிர் பீச்சப்படுகிறது...


ஒரு முழுநிமிட நேரத்துக்கு நீடித்தது கதிர் வீச்சு...
அழிவு உறுதிசெய்யப் பட்டு விட்டது...!
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ!
ஆனால்மேலே மறைவிலிருந்து இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது ஆர்ச்சி..
தந்திரமாக ஏமாற்றிவிட்டது ஆர்ச்சி! இங்கே பயனற்றுக் கிடந்த உலோக உடற்கவசத்தை ஆர்ச்சியைப் போல தோற்றமளிக்குமாறு நிறுத்திவைத்தது! சூப்பரான் ஏமாந்து போனது !
34


உருகி வழிந்த உலோக குழம்பை ஆராய்ந்து ஆர்ச்சியின அழிவை உறுதிபட தெரிந்து கொள்ள முனைவந்த சூப்பரான், ஆர்ச்சியிடம் மாட்டிக்கொண்டது. .
இனி வேறொரு தந்திரம் ஊப்ப் . !
சுருக்கு மாட்டிக் கொண்டதும் விசையோடு சுண்டி இழுத்தது ஆர்ச்சி. .
ஆர்ச்சியை அழிக்க கதிர்வீச்சைபாய்ச்சிய குற்றத்திற்கு இது தான்சரியான தண்டனை
டமால்

F-2


ஜெட்டை பயன்படுத்தி கீழே இறங்கியது ஆர்ச்சி...
ஹேை.. குறுக்கே வராதே..! தோழர்களை தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்..! கலங் கிப்போயிருப்பார்கள்..! மின்னணு மூளை அவர்க ளுக்கு இல்லை — பாவம்..
ARCH
இதற்கிடையே..,
தொடர்ந்து சமிக்ஞை வருகிறதா தாம்சன்...? அல்லது ஏதாவது விபரீதமாக —
அப்படித்தான் ஏதோ நடந்து விட்டிருக்கக்கூடும்...! தப்பிக்கும் வாய்ப்பே இல்லை என்று தோன்றுகிறது!


புதராக வளர்ந்துகிடந்த நதிக் கரையோரம் கொண்டுசெல்லப் பட்டனர்
படகை நோக்கி தோழர்கள் கொண்டு செல்லப் படுகிறார்கள் எப்படியாவது மீட்க வேண்டும்!
அதோ போகிறார்கள் ! சிந்திக்க வேண்டும்- தீவிரமாகவும் வேகமாகவும்!- எப்படி அவர்களை விடுவிப்பது? ம்ம்ம்...!
சூப்பரான்கள் கீழே கைதிகளை சூழ்ந்திருக்க டிரபால்கர் சதுக்கத்திலுள்ள நெல்ஸன் கோபுரத்திலிருந்து ஆர்ச்சி நோட்டம் விட்டது.
கைதிகள் நம் வசம் பத்திரமாக உள்ளனர்!
அன்னிய ரோபோ அழிக்கப்பட்டு விட்டது!



அதிஜாக்கிரதையோடு ஆர்ச்சி விரைந்தபோது, மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டன இரண்டு உருவங்கள்...
ஆர்ச்சிக்கு ஒரு அற்புத ஐடியா!
நில்... யார்-நீ- நண்பனா விரோதியா?
முன்னால்வந்து அடையாளம் காட்டு இல்லையேல் சுடப்படுவாய்!
க்கத்திலிருந்த மரத்தின் பின்னால் பாய்ந்தது ஆர்ச்சி..
நண்பன்தான் நல்லவர்களுக்கு.. நகராதீர்கள்- நசுங்கி நாசமாகப் போங்கள்!
துளைபோடும் கருவியால்குகைப்பாதையை மின்னல் வேகத்தில் உருவாக்க வேண்டும்...



கைதிகளை ஏற்றிக்கொண்டு படகு நகரத்தொடங்கியது..
திறன் உற்பத்திக் கூடத்தை நோக்கிச் செல்லட்டும்.படகு
ஆர்ச்சியைக் காணோம் அதற்குஅழிவேஇல்லை என்ற கூற்று பொய்த்து விட்டது!
பேசாதே — முறைக்கிறான் ..
தேம்ஸ் நதியின் நீர்ப்பரப்பின் கீழே-
இதோ ஆற்றினுள் வந்துவிட்டது ஆர்ச்சி படுகையில் நடந்து படகை நெருங்கப் போகிறது!
அதோ வருகிறதுபடகு யாருக்கும் காயம் ஏற்படாதவாறு எப்படிகைதிகளை மீட்பது ? காவலாளிகளின் கையில் கதிர் வீச்சு துப்பாக்கிகள் இருக்கின்றன.. ! பிரச்சனைதான்!
மனச்சோர்வோடு, திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றனர் தோழர்கள் ..
கவனித்தாயா.... விக்டர்- அந்த சுறுமீன்கள் கலவரப் பட்டு விரைகின்றன
அடி சக்கை .. ஆர்ச்சியேதான் அது! ஆனால் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறதோ- தெரியவில்லை!



யாரேனும் தப்பிக்க முயன்ருல் கதிர்வீச்சு துப்பாக்கியை பயன்படுத்த தயங்கமாட் டோம்... ஜாக்கிரதை!
அங்கே என்ன வேடிக்கை- திரும் புங்கள்!
ஆ...வ்!
அடுத்த நடவடிக்கைபற் றிய தீவிர சிந்தனை யோடுபடகை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது ஆர்ச்சி
ஈவு இரக்கமற்ற ராட்சஸர்கள் மறுபக்கம் திரும்பினர்..
ஆர்ச்சி ஏதாவது தந்தி ரமாக செய்யதிட்டமிட் டிருக்கும்!
அந்த பிசாசுகளை ஏமாற்றி எப்படி தந்திரமாக கைதி களை விடுவிப்பது-



ஹிஹியாயா.. வ்வ்-! முரட்டு நங்கூரம்-! ஆர்ச்சியின் மின்னணு மூளையில் திட்டம் ரெடி.
தன் டெலஸ்கோப் கரத்தை நீட்டியது ஆர்ச்சி..,
படகின் புரபெல்லரை சிதைத்து விட்டது ஆர்ச்சி-
கராக்!



தடுமாறிய படகு சட்டென்று நின்று போனது...
புரபெல்லரில் ஏதோ சிக்கிக்கொண்டு விட்டது போய் ஆராய வேண்டும்.
ஆர்ச்சி புத்திசாலித்தனமாக ஏதாவது தந்திரம் செய்யும் என்று நான் சொன்னேனில்லையா?
விரைவாக நீருக்குள் இறங்கினான் ஒரு சூப்பரான் ஏஜெண்ட்
ஆனாலும் ஆர்ச்சியின் மதியூகத்துக்கு ஈடு இணையே கிடையாது!
புரபெல்லரை நாங்கள் சரிசெய்யும்வரை, கைதிகளை கவனமாக பார்த்துக் கொள்.
கீழே வந்தவனை இறுகப்பிடித்துக் கொண்டது ஆர்ச்சி..
ஆர்ச்சிக்கு கோபம்வந்து விட்டால் ரொம்பவும் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும்....


என்ன ஆயிற்று? சகாவை காணவில்லை. ஏதோ விபரீதம்!
ஆர்ச்சியின் விஷமம்தான்! இன்னும் எப்படியெல்லாம் திட்டமிட்டிருக்கிறதோ?
நீருனுள் பயங்கர மோதல் முடிவுற்றது ..
தொலைந்தான்- இனி திட்டத்தின் அடுத்த கட்டம்...
விக்டர்.... அங்கே பார்— ஆர்ச்சியேதான்.! படகினுள் ஏறி வருகிறது!
ச்சு... மெள்ளப்பேசு! அந்த சைத்தான்களின் காதில்விழுந்துதொலைக் கப்பேசகிறது!


மறுகணம்...ஆர்ச்சியின் ஜெட்அமைப்புஇயக்கம்பெற்றது
ஸ்ஸ்ஸ்
அபாயம்... அன்னிய ரோபோ...சுடு!
ஒட்டு மொத்தமாக வீழ்த்திவிட்டது பலே
எல்லோரும் பதுங்கிக் கொள்ளுங்கள்!


அதிரடி தாக்குதல் சுலபமாக வெற்றியை ஈட்டித் தந்துவிட்டது...!
மின்னல்வேகத்தில் அனைவரின் கை விலங்கையும் களைந்தது ஆர்ச்சி!
ணங்!
பயல்களுக்கு நீந்தத் தெரியாது-ஆர்ச்சிஅறியும் படுகையில் நடந்துவந்து சேருவதற்குள் நாம் வெகு தொலைவு போய்விடலாம்.
ஆர்ச்சி... படகை நீதான் தள்ள வேண்டும்!


ஹே நாம் எங்கே போகிறோம் எப்படி தப்புவது?
பொறுப்பை ஆர்ச்சியிடம் விட்டுவிட்டு நிம்மதியாக இரு தாம்சன்! இந்த அளவுக்கு நிலைமை சீரடைந்ததற்கு மகிழ்ச்சியடைய வேண்டும்!
சூப்பரான் கண்ரோலிலிருந்து அவசர உத்தரவு பிறப்பிக்கப் பட்டது...
சில நிமிடங்களுக்குப்பின்... எதிரிகள் கரையேறினர்—
சூப்பரான் மாஸ்டர்களுக்கு அழைப்பு அவசர செய்தி ..
கைதிகள் தப்பிவிட்டனர். அன்னியரோபோ அவர்களை கடத்திச் செல்கிறது உடனடி நடவடிக்கை அவசரமாக மேற்கொள்ளப் படவேண்டும்!
படகை உடனே கண்டு பிடித்து கைப்பற்றவும்— அல்லது அழிக்கவும்... நாசப்படையை அவிழ்த்து விடவும்!



தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து முடிந்த வரைவேகமாக படகை செலுத்திக் கொண்டு சென்றது ஆர்ச்சி —
இன்னேரம் அபாய அறிவிப்பு ஒலிபரப் பாகியிருக்கும்— அங்கே
ஆர்ச்சியிடம் எங்களை கரை சேர்க்கச் சொல்— இந்த வரைபடம் எங்களை நீங்கள் வந்துசந்திக்கவழிகாட்டும்
நகரவாசி ஒருவன் தாம்சனின் கையில் ஒரு காகித சுருளை திணித்தான் ...
இப்படி பக்கவாட்டில் செல்லலாம்
ஆர்ச்சி- பாலத்தருகே படகை நிறுத்து!
கனமான இரும்பு சங்கிலியை வீசி எறிந்தது ஆர்ச்சி...
ஆர்ச்சி
ஆப்பரான்களை
இதோ.படகைநிறுத்த ஏற்பாடு தயார்!
சொய்ங்!


ஒவ்வொருவராக மேலே ஏறுங்கள் சீக்கிரம்...!
அவர்கள் எல்லோரும் ஏறியானதும் நாம் ஏற லாம் எந்த நிமிடமும் நிலைமை மோசமாகி விடக் கூடும் என்றொரு குறு குறுப்பு ஏற்படுகிறது!
தாம்சன் சொன்னது சரியாகிவிட்டது ஆபத்து அவர்களைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தது
நாசப்படையை ஏவி விடு! படகை தேடிப்பிடித்து அழிக்க வேண்டும் !
அழி! — நாசம் செய்!
ஏவுதளம் ஒன்றிலிருந்து ராட்சஸ சுரு தோற்றமுடைய ரோபோகள் ஏவப்பட்டன
அன்னியரோபோவும் கைதிகளும் அழிவது நிச்சயம்!
நாசப்படை கிளம்பி விட்டது அதோ!



நாசப்படையின் பாதையில் ஒரு பீப்பாய் குறுக்கிட அழிவுக்கதிர் வெளிப்பட்டு
டமால்!
...பீப்பாயை உருத்தெரியாமல் அழித்தது— கண்ணிமைக்கும் பொழுதில்!
அந்த பயங்கரத்தை கண்ணுற்ற இலண்டன் வாசிகள் எச்சரிக்கை குரல் எழுப்பினர்...
ஓ...நோ! தாமதித்து விட்டீர்கள்...! நாசப் படை நெருங்கிவிட்டது
ஆற்றினுள் குதித்து விடுங்கள் அந்த சைத்தான்கள் படகை தாக்கிஅழிப்பது உறுதி
பக்கத்திலிருந்த தூணை நோக்கிப் பாய்ந்தது ஆர்ச்சி....
ஆர்ச்சி இப்படி செய்யுமென்று நான் நினைக்கவேயில்லை!
விக்டர்..பார்த்தாயா..! தான்பிழைத்தால்போதுமென்று நம்மை தவிக்க விட்டு ஓடிவிட்டான்!




படகை ஓங்கி உதைத்துத் தள்ளியது ஆர்ச்சி-
ஆர்ச்சியை நம்ப முடியாது!
ஆ...!
நாசப்படை ரேபோக்களிடமிருந்து சமிக்ஞைகள் வெளிவரலாயின-
அதோ நெருங்கி விட்டன...!
இலக்கு தென்படுகின்றது.. நெருங்கிச்சென்று அழிக்க வேண்டும்..
படகு பாலத்தின் கீழாக கடந்து சென்று கொண்டிருக்கிறது!
மறுகணம் ஆர்ச்சி செய்த காரியத்தை யாரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது
கிராக்!!
நாசப்படையை நாசம் செய்யப் போகிறது ஆர்ச்சி...
ஏதோ வெடிவைத்து தகர்க்கப்பட்டதுபோல் பாலம் சரிந்து விழுந்தது..
சூப்பரான் ரோபோக்கள்மீது விழுமாறு பாலத்தை தகர்த்து விட்டது ஆர்ச்சி.
நான் சற்றுமுன் சொன்னதை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் இந்த ரோபோவை கடைசிவரை நம்பலாம்!


காதைச் செவிடாக்கும் பேரோசை எழுந்தது...
டமால்!
ஜெட்டை பயன்படுத்தி ஓடிவிடவேண்டும் அங்கே தோழர்களுக்கு ஆர்ச்சியின் உதவி தேவைப்படும்!
இப்போது சொல்— தன்னை காத்துக்கொள்ளவா ஆர்ச்சி அப்படி படகைவிட்டு வெளியேறியது?
தெரியாமல் பேசிவிட்டேன்அப்படி! ஆர்ச்சியிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்!
பழைய சைக்கிள் ஒன்றை எங்கிருந்தோ தேடிப்பிடித்துஅதில் ஏறி விரைந்தது ஆர்ச்சி..
சீக்கிரம்வந்து நாங்கள் கரையேற உதவி செய் ஆர்ச்சி!
ஸாரி..ஆர்ச்சி! உன் நோக்கம் புரியாமல் தவருக எண்ணி விட்டேன்!


இலண்டன் வாசி கொடுத்துச்சென்ற காகிதசுருள் அப்போது நினைவுவரவே அதை எடுத்துப்பிரித்தான் தாம்சன்.
சரியான உளறல்..! நாம் அவர்களை சந்திக்கஎங்கே செல்லவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது தெரியுமா— 'ராட்சஸ ஐந்துக்களின் அரண்மனைக்கு! இதுஏதோ ஒரு படுபயங்கரமான விவகாரம் என்று தோன்றுகிறது!



முதலில் கரை ஏறிக்கொண்டு அப்புறமாக அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்றுதீர்மானித்தனர்—
படகு கட்டுப்பாடு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது சீக்கிரம் வந்துசேர் ஆர்ச்சி!
இலண்டன்வாசிகளை நாம்போய் சந்திக்க வேண்டும்.ஆனால் அதில் ஏதோ விவகாரம் இருப்பதுபோல்தோன்றுகிறது.



இதோ வந்துவிட்டது ஆர்ச்சி... கவலே வேண்டாம்!
என்ன செய்யப் போகிருனே, தெரியவில்லேயே
குழுமியிருந்த நீர் யாஜேகளின் தலே மீது காலே வைத்து பாய்ந்தோடி வந்தது ஆர்ச்சி-
சரிந்து விழுந்த பாலத்தின் அழிவிலிருந்து தப்பிய ஒரே ஒரு ரேபோ தன் பயணத்தைத் தொடர்ந்தது-
பாவம் அந்த நீர்யாஜே கள்..ஆயுளுக்கும் இந்த அனுபவத்தை மறக்க மாட்டா!
ஆர்ச்சி அங்கேபார் — ஒருசைத்தான் தப்பித் துக்கொண்டு விட்டது நம்மைநோக்கி வரு கிறது..
அழிவுக்கதிர்களே பாய்ச்சு கிறது நம்மை நோக்கி!
எந்நேரமும் இந்த மாங்காய் மடையன் பந்தா பண்ணிக் கொண்டேயிருப்பான்!


இலக்கை நெருங்கி யாயிற்று—இதோ.. அழியப்போகிறது!
மின்காந்த சக்தியை பயன் படுத்தி கிரேனின் கொக் கியை அருகே வரவழைக் கிறது ஆர்ச்சி...!
கிரேனின் கொக்கி அருகே வந்ததும்--
ஆர்ச்சியை இறுக பற்றிக்கொள்ளுங் கள்...
சீக்கிரம்...! சீக்கிரம்...!
அழிவுக்கதிர் பீச்சப் பட்டபோது—
படகு சுக்கல் நூறுகிவிட்டது...
டமால்
இலக்கு நாசம் செய்யப்பட்டது!
பத்திரமாக கரைசேர்ந்து விட்டோம்..! தோழர் களுக்கு இன்னும் நடுக் கம் தீரவில்லைபோலிருக் கிறது!
செய்வதை நீ கொஞ்சம் முன் னதாக செய்திருந் தால் நன்றாக இருந்திருக்கும்!


தெடிய பயணத்தின் பின்-
அதோ அந்தக் கட்டிடம்தான்! இலண்டன் வாசிகள் தங்களை வந்து சந்திக்குமாறு குறிப்பிட்-டிருந்தது இதைத் தான்!
ஏன் அப்படியொரு பெயர் சூட்டியிருக்கிறார்களோ... ஆர்ச்சி நீ முன்னால் போ...
எதிரே தென்பட்டகாட்சி அச்சமூட்டுவதாக இருந்தது ..
விக்டர் அங்கே கவனித்தாயா- பயங்கரம் !
அது டினோஸரின் பிரம்மாண்டமான மாடல் ஆர்ச்சி அறியும்!
ஒருபுதிர் விடுபட்ட நிம்மதி ஏற்பட்டது தோழர்களுக்கு —
கலவரமடையத் தேவையில்லை! இந்த இடம் ஒரு மியூசியம் போலும்! ராட்சஸ ஜந்துக்கள் இங்கே இருக்கக்கூடும்....ஆனால் கல்லினால் ஆனமாடல்களாக
ஆர்ச்சி சொன்னதும் இதைத் தான்!



ஆனால் அவர்கள் அறியாதவாறு அங்கே ஒன்று அவர்களை நோக்கி நகர்ந்து வந்தது...
லண்டன் வாசிகளை ஏன் இங்கே காணோம்?
மின்னணு மூளை கொண்ட ஆர்ச்சியிடம்கேட்டுப்பார்
அப்போது திடீரென்று அவர்களை நோக்கி ஒளி வெள்ளம் பாய்ந்தது:—
மோசம் போனோம் — இது சதிவேலை தான் நான் முன்பே சந்தேகப்பட்டதுபோல்!


55 வேகமாக அவர்களை நோக்கி வந்தது அந்த ராட்சஸ உருவம்
சூப்பரான் வாகனம்! அதன் கொடுக்குகள் நம்மை பற்ற வருகின்றன... தப்பியோட அவகாசமில்லை!
ஆர்ச்சி... காப்பாற்று எங்களை!



தன் மார்பு அறையிலிருந்த காற்றுப் பீச்சும் அமைப்பை சட்டென்று இயக்கியது ஆர்ச்சி!
நெருக்கடியை சமாளிக்க வேறுவழியில்லை தோழர் கள் அகப்பட்டுகொள்ளாமல் தவிர்த்து விட்டது ஆர்ச்சி!
அந்த வாகனத்தின் பக்கவாட்டுக் கதவு திறந்தது —
விஷமக்காரர்களை தேடிக் கண்டுபிடித்து அழிக்க வேண்டும்!
எங்கே ஓடி ஒளிவது !
கத்தாதே ! ஓசை எழுப்பாமல் நழுவி மறைந்து விடலாம்!
பயங்கரமான கண்ணாமூச்சி ஆட்டம் ஆரம்பமானது .
ஆர்ச்சி எங்கே போய்த் தொலைந்ததோ..சரியான நேரத்தில் காணமற் போய் விட்டான்!
வீணாக ஆர்ச்சியை பழிக்காதே! அதன் சாமர்த்தியத்தில் பாதி நமக்கு இருந்தால்கூட இப்படி திண்டாட வேண்டிவந்திராது..!



சூப்பரான்கள் அறியாவண்ணம் இரகசியமாக டிரேஸர் மாடலின் தலைமீது ஏறிக்கொண்டது.
தோழர்களை காப்பாற்ற ஏதாவது உபாயம் கண்டுபிடிக்க வேண்டும்
விழுது ஒன்றைப்பற்றித் தொங்கியவாறு முன்னால் பாய்ந்தது ஆர்ச்சி
வாகனத்தில் யாருமில்லை! ஆர்ச்சிக்கு கொஞ்சம் மெக்கானிஸம் தெரியும்
தாம்சனும், விக்டரும் சட்டென்று உறைந்து போய் நின்றனர்...
அதோ. ஆர்ச்சி சூப்பரான் வாகனத்தினுள் நுழைகிறது. என்ன யுக்தியோ?
அந்த முரட்டுவாகனம் நகர்ந்தது
நேர்எதிரே இருக்கிறார்கள். கொடுக்குகளைபயன்படுத்தி ஆர்ச்சி அவர்களை தூக்க நினைக்கிறது போலும்!


கொடுக்குகள் இரண்டும் இணைந்தன...,
அப்படியே சுழற்றி எறியப்போகிறது ஆர்ச்சி!
தூ... நீங்களெல்லாம் ரோபோக்கள்— வெட்கக்கேடு!
ராட்சஸ ஜந் துக் களின் அரண்மனை நோக்கி விரையவும் வெளியேறும் வழிகளை மூடவும்!
தப்பித்துக்கொண்டே சில குப்பரான்கள் அழிவுக்கதிர் களை வாகனத்தை நோக்கி பீச்சின- ஆனால்... ஆர்ச்சி எப்போதோ இறங்கி ஓடிப்போயிருந்தது!
மீண்டும்கடைசித்தரு ணத்தில் ஏமாற்றி தப்பித்துக் கொண் டது.. ஆர்ச்சி!
அங்கே பார்— விஞ்ஞானப் புதிர் சைத்தான்கள் பலவும் ஒட்டுமொத் தமாக கிளம்பி விட் டன நம்மை அழிக்க
தொலைந்தோம்... இத்தோடு!



அவர்கள் நின்றிருந்த இடத்தில் இருந்த கல்லால் ஆன ராட்சஸ விலங்கின் உடற்பகுதியில் ஒரு திறப்பு திறந்து கொண்டது...
ஆர்ச்சி, விக்டர், தாம்சன் இங்கே இந்தப்பக்கமாக
சூப்பரான்களிடம் நீங்கள் மாட்டிக்கொண்டது எந்த சதித்திட்டத்தினாலும் அல்ல! நாங்கள்கொஞ்சமும் எதிர்பார்க்காத அசம்பாவிதம்அது
முதலில் திறப்பை மூடுங்கள் மிச்சத்தை பிறகு பேசிக்கொள்ளலாம்!
டிராலியை நோக்கி ஓடிவாருங்கள் பழைய நிலத்தடி இரயில் பாதைவழியே நாம் தப்பிச்சென்றுவிடலாம்
உன்ஜெட் அமைப்பை பயன்படுத்தி அந்த டிராலியைஜெட்வேகத்தில் ஓடச்செய் ஆர்ச்சி!
இதற்கிடையே ...
எதிரிகளைக் காணோம்! வெளியேறும் பாதைகளை அடைத்தாயிற்று தரைக்கு அடியில் குகைப்பாதைவழியே அவர்கள் தப்பிச்சென்றிருக்கக்கூடும்! விரைந்து நாம்செயலாற்ற வேண்டும்!


அதோ-எதிரே தெரிகிறது பிக்காடிலி சதுக்கம் இதுவரைஎந்தஇரயிலும் இத்தனை வேகத்தில் ஓடியிராது!
சூப்பரான்களுக்கு எதிராக நம்வசமுள்ள இரகசிய ஆயுதம்- ஆர்ச்சிதான்! வேகத்தை மட்டுப்படுத்தச் சொல்!


மற்ற இலண்டன் வாசிகள் இவர்களை எதிர்நோக்கி அங்கே காத்துக்கொண்டிருந்தனர் ...
அதோ ஆர்ச்சியோடு வந்து விட்டார்கள் இனி, சூப்பரான்களோடுமோதிபார்த்து விடலாம்!
61



தங்களுடைய இனிமை
யான வரவேற்பைக்
கண்டு பெருமிதம்
கொள்கிறது.. ஆர்ச்சி!
இவனுக்கு அவ்வப்போது
கொஞ்சம் தலைக்கனம்ஏறி
கொண்டு விடும் பொருட்
படுத்தாதீர்கள்!
இப்போது ஆர்ச்சி
யின் கைதானே
ஓங்கியிருக்கிறது
மேலே, இலண்டனின் தெருக்களில் பல்வேறு
நூதன இயந்திரங்களின் பரபரப்பான நடமாட்டம்
இருந்தது...
செய்தி பெறப்பட்டது
இதோ கிளம்பி
விட்டோம்!
அன்னிய ரோபோவும்,
மனிதர்களும் நிலத்தடி
குகைப்பாதை வழியே
தப்பிச்சென்று விட்டனர்
தேடிப்பிடித்து அழித்தாக
வேண்டும்- தாமதமின்றி!


பெரிய இரப்பர் குழாய்கள் ஆற்றினுள் இறக்கப்பட்டு சக்திவாய்ந்த நீரேற்று இயந்திரங்கள் துரிதகதியில் இயங்கின...
துளை வழியாக தண்ணீர் உள்ளே செலுத்தப்படும்
தரையில் துளைபோட்டு நிலத்தடி குகைப்பாதை யினுள் வெள்ளம் பாய்ந் தோட செய்யவேண்டும்
எல்லா சூப்பரான் ஏஜெண்டுகளுக்கும் அபாய எச்சரிக்கை சமிக்ஞை கொடு—
குகைப்பாதையினுள் வெள்ளம் பாய்ந்தோடி வந்தது
ஆர்ச்சி...போ- மசமசவென்று இங்கேநிற்காதே போய் உடனே ஏதாவது செய்!
தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து-
ஐயோ
ஓடுங்கள்.. போய் மேடான பகுதியில் ஏறிக்கொள்ளுங்கள்
நீயும் ஓடிவா...ஆர்ச்சி இங்கே ஏதும் செய்வ தற்கில்லை! நயாகரா நீர்வீழ்ச்சியை சுரண்டி யால் தடுத்து நிறுத்த முயன்றகதைதான் இது


அவசர கால- வெளியேறும் படிக்கட்டுகளில் ஒரே நெருக்கடி.—
மந்திரம் போட்டு காரியத்தை சாதிக்க ஆர்ச்சிக்கும்தெரியாதே
தப்பியோடி உயிர்பிழைத் தால் போதும் என்றாகி விட்டது!
தலைதெறிக்க ஓடினர் ..
குகைப் பாதையைவிட்டு வெளியேறிமேலேசென்று விடுவதுதான் உயிர் பிழைக்க இருக்கும் ஒரே வழி!


வெள்ள நீரின் வழியே பாம்புகளும் முதலைகளும் வந்து சேர்ந்தன
இந்தவலையை வைத்து பாம்பு முதலை தொடர்ந்து விரட்டிக் கொண்டுவராமல்ஆர்ச்சி தடுத்து நிறுத்தும் தைரியமாக செல்லுங்கள்!
தைரியமா.. அது எப்போதோ சென்று விட்டது எங்களை விட்டு!
உள்ளிருந்தோர் வெளியேறி விட்டனர்...
இந்த இரகசியவழி சூப்பரான்களுக்கு தெரியாது! அந்தசைத்தான்கள்எதையும் இங்கே காணவில்லை! வாருங்கள் ஓடிச் சென்று எங்கேயாவது ஒளிந்து கொள்வோ
ஆர்ச்சியை காணோமே அவனை நாம் இழந்து விடலாகாது!
கீழே, கம்பிவலையை பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது ஆர்ச்சி!
போதும் வா போகலாம்!
மற்றவர்கள் எல்லோரும்போய் விட்டனர் நாம் மட்டும்தான் இங்கிருக்கிறோம்!



ஆனால் வெளியே திடீரென்று சில ராட்சஸ உருவங்கள் நகரத் தொடங்கின ..
வலையை பரப்பி மனிதர்களை பிடியுங்கள்!
உயிரோடு பிடிக்க முடிந்தால் நல்லது!


மறுகணம் —
ஆர்ச்சி ஆபத்து! இலண்டன் வாசிகள் அனைவரையும் வலை வீசி பிடித்துவிட்டன சூப்பரான்கள்!
ஆஆவ்வ்...!
ஏமாந்து விட்டோம்! சூப்பரான்கள் நம்மை இங்கே எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந் திருக்கின்றன


மோசம் போனோம்! மேலே போனால் எதிரிகளிடம் சிக்கிக்கொள்வோம். உள்ளே இருந்தால் நீரில் மூழ்கி செத்துப்போவோம். இருதலைக் கொள்ளி எறும் பின் நிலை!
மேலே செய்வதறியாது திகைத்தனர் இலண்டன் வாசிகள் —
ஆர்ச்சி ஏமாற்றிவிட்டது சரியான சமயத்தில் எங்கோ ஒளிந்துகொண்டு விட்டது!
ஆர்ச்சியும் அதன் சகாக் களும், ஒன்றுபிடிபடுவார் கள் அல்லது மடிந்து போவார்கள்வெள்ளத்தில்!
புயலொன்று உருவாகி வந்தது பிடிபட்ட மனிதர்களோடு சூப்பரான்கள் திரும்பி நகர்ந்தன ...




அன்னிய ரோபோவுக்கு எச்சரிக்கை! வெள்ளம் குகையை நிறைக்குமுன் வெளியேறி சரணடையவும்!
அவர்கள் தலை நீட்டியதும் அழிவுக்கதிர்களை பாய்ச்சி தீர்த்துக் கட்டுபகள்!

இதற்கிடையே —
ஊஹூம்... பிரயோஜனப்படாது ஆர்ச்சி. விரைவிலேயே நீர்மட்டம்குகைப் பாதையின் கூரையை தொட்டுவிடுவது நிச்சயம்.
இங்கேஇருந்துமூச்சுத் திணறி செத்துப்போவதா அல்லது மேலே போய்சூப்பரான்களின் அழிவுக்கதிருக்கு பலியாவதா என்று நாம் தீர்மானிக்க வேண்டிய நெருக்கடி!



ஆனால் வெளியே திடீரென்று புயல் தீவிரமடைந்து அனைத்தையும் சர்வநாசம் செய்யத் தொடங்கியது
க்ராக்!
ஐயோ என்னவிபரீதமோ தெரியவில்லையே!
அழிவுக்கதிரை பாய்ச்சுகிறார்களோ என்னவோ பேரிடி விழுந்தாற் போலிருக்கிறது!
ஹ்ஹ்ர்ர்...!


அங்கே நிகழ்ந்த அதிசயத்தை பார்த்து வாயடைத்துப் போய் நின்றார்கள் தோழர்கள்—
தாம்சனின் கூற்று தவறு நிஜம் என்னவென்று ஆர்ச்சிக்கு புரிகிறது
நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது!
இடிபாடுகளை அகற்றி வழி ஏற்படுத்த முயற்சிக்கிறது ஆர்ச்சி!
மரணத்தின்பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட்டோம்— அதிர்ஷ்டம் நம் பக்கமிருக்கிறது. இடிபாடுகளிலிருந்து வெளியேறி மேலே செல்ல முடிந்தால் சூப்பரான்களை ஒரு கை பார்த்துவிடலாம்!
இதுவரை மறைந்து கிடந்த ஒரு நுழைவுப்பாதை, கூரை இடிந்து விழுந்ததால் வெளிப்பட்டது ...
ஆர்ச்சி மேலே ஏறப்போகிறது தோழர்கள் ஆர்ச்சியை பற்றிக்கொள்ளவும்!
விழுந்து தொலைக்காமல் மேலே போய்ச் சேர்ந்தால் சரிதான்!
டெலஸ்கோப் கரத்தை நீட்டி மூடிக்கிடக்கும் கதவை ஆர்ச்சி திறக்கும்!




சிதிலமடைந்து நின்றகதவு ஆர்ச்சியின் கை பட்ட மாத்திரத்தில் சரிந்து விழுந்தது.
ஆச்சரியமாக இருக்கிறதே.. நிலவொளி எங்கும் பரவியிருக்கிறது,மேல்தளத்துக்கே வந்து விட்டோம்போலிருக்கிறது
களக்!
ஆர்ச்சி- நீ முன்னால் போ!
ஒரு அலுவலக கட்டிடத்தின் மேன்மாடியிலிருந்தார்கள் மூவரும் —
விக்டர்..ஆர்ச்சி!அந்த குப்பரான் இயந்திரங்களிடம் ஒரு சலனத்தையும் காணோம்.என்ன கேடுவந்ததோ அவைகளுக்கு?
ஆர்ச்சி! அப்போது கேட்ட பேரொலிக்கு நீ காரணம் சொல்லவில்லையே இன்னும்?


புயல் அடித்தபோது இடியும் மின்னலும் ஏற்பட்டிருக்க வேண்டும்
அதனால் இந்தசைத் தான்களை இயக்கும் மத்தியகட்டுப்பாட்டு கேந்திரத்தில் பழுது ஏற்பட்டிருக்கவேண்டும்
தொலைவில் தீ பற்றிஎரிந்துகொண்டிருந்தது
அதோ- அங்கே கவனி! மின்னல் தீப்பிடிக்கச் செய்திருக்கக்கூடும்... பழுதுபார்க்க முடியாத அளவுக்கு அவை கெட்டுப்போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
திடீரென்று—
ஏய்..என்ன இது — உனக்கென்ன மறை கழன்று விட்டதா?
ஜெட்டை பயன்படுத்தி நாம் விரைந்து செல்வோம் வழியில் ஆர்ச்சி திட்டமிடும்!



பூட்டிக்கிடந்த விற்பனைக்கூடத்தின் வெளியே தரையிறங்கினர் ..
எதற்காக அதனுள்ளே போகிறானோ- தெரியவில்லையே!
க்ராக்
நாம் பசியோடிருப்போம் என்றெண்ணி, உண்ண ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கிறான் போலும்!
ரொம்பநன்றி, ஆர்ச்சி உணவுப் பொருட்கள் அடங்கிய அந்த டின்களை இப்படிக் கொடு!
சீக்கிரம் இங்கிருந்து அகன்று விட்டால் நல்லது..அதோ அங்கே நிற்கும்சூப்பரான்இயந்திரத்தின் பார்வையே சரியில்லை!
ஏய் .. அங்கே எங்கேபோகிறாய்?
ARKET
இந்த பயல் செய்கிற காரியம் கொஞ்சமும் பிடிக்கவில்லை-எனக்கு!
73


டின்களை மூட்டையாக கட்டியது ஆர்ச்சி...
எந்த விநாடியும் அந்த சைத்தான் மறுபடியும் இயக்கம் பெற்றுவிடக் கூடும் இங்கே நிற்பது ஆபத்து!
அது இயக்கம்பெற்று விடாமல் தடுக்கும் முயற்சியில்தான் ஆர்ச்சி ஈடுபட்டிருக்கிறது !
சமர்த்துடா.. கண்ணு!
பலே ஆர்ச்சி! அவை இயக்கமிழந்து கிடப்பதை வாய்ப்பாக பயன்படுத்தி சுலபமாக அழித்துவிட்டாயே!
டமால்!



ஆனாலும் தாம்சனுக்கு நிம்மதி ஏற்பட வில்லை...
அதோ பூதாகரமாக நிற்கிறதே- அந்த சைத்தானை என்ன செய்யப்போகிறாய்?
அது நமக்கு தேவைப் படுகிறது- பதுங்கிக் கொள்ளவும் தப்பிச் செல்லவும்!
அந்த இயந்திரத்தின் ஒரு காலைப்பற்றி மேலே ஏறியது ஆர்ச்சி...
நுழைவாசல் ஒன்றை ஆர்ச்சி ஏற்படுத்திய தும்தோழர்கள்மேலே ஏறிவரலாம்!
ஆர்ச்சியின் மார்பு அறையில் தேவை யான எல்லாகருவி களும்இருப்பது இம் மாதிரி சந்தர்ப்பங் களில் ரொம்ப உதவி யாக இருக்கிறது!




சில நிமிடங்களுக்குப் பின் —
வேகமாக ஏறி வாருங்கள்...
SUPERMARKET
தோழர்கள் ஏறி உள்ளே வந்ததும் தன் மின்காந்த அமைப்பை இயக்கியது ஆர்ச்சி-
உணவு டின்களே — நீங்களும் மேலே வாருங்கள்! ஹூம்... அப்படித்தான்!
இவ்வளவு ஆபத்தான நிலேயிலும் பயலுக்கு இப்படி வேடிக்கை செய்யத்தோன்றுகிறதே


இயந்திரத்தின் ஜன்னல்கள் ஒருவழிகண்ணாடியினால் அமைக்கப்பட்டிருக்கின்றன வெளியே பார்க்கலாம் ஆனால் வெளியிலிருப்போருக்கு உள்ளிருப்பது தெரியாது!
அங்கே- சூப்பரான் மத்திய கட்டுப்பாட்டு கேந்திரத்தில்..
தானியங்கி அமைப்பு தீயை அணைத்து விட்டது மீண்டும் மின்சக்தி கிடைத்து விட்டது சூப்பரான்கள் எதிரிகளை தேடி அழிக்கும் பணியைத் தொடரவும்!
எல்லா இயந்திரங்களும் மீண்டும் உயிர்பெற்றன...
அன்னிய ரோபோவும் அதன் இருதோழர்களையும் தேடிக்கண்டு பிடிக்க வேண்டும்
பார்த்த மாத்திரத்தில் அழிக்க வேண்டும்!
நாம் இருக்கும் இயந்திரமும் மற்றவைகளை பின் தொடர்ந்து சென்றால் தான் சந்தேகம் எழாது!
இதை இயக்க நமக்குத் தெரியாதே. ?


இயந்திரத்தில் ஏதோ விஷமம் செய்தது ஆர்ச்சி-
அழிவுக்கதிரைபாய்ச்ச இதில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது -அதை இயக்க முடியுமாஎன்று முயற்சிக்கிறது ஆர்ச்சி!
திடீரென்று கண்ணைப்பறிக்கும் பேரொளி பளீரிட்டது அங்கே-!
ஆர்ச்சி பாலத்தை தகர்த்து விட்டது.சூப்பரான்- தேடும் படை ஒட்டுமொத்தமாக நாசமாகிப் போனது !
விஷ்ஷ்...
தொடர் வினைவு அவர்களையும் பாதிக்கும்நிலை ஏற்பட்டது'
இதைவிட்டு உடனே வெளியேறுவிடில் நாமும் அழிந்துவிடும் அபாய முண்டு....
ம்...சீக்கிரம்!
டமால்!


ஆர்ச்சி தன் ஜெட் அமைப்பை இயக்கியது-
நல்லவேளை - கடைசித் தருணத்தில் தப்பிவிட்டோம்! சூப்பரான்படை பலத்தை கணிசமாக குறைத்துவிட்டோம்!
உன்னை தீர்த்துக் கட்டுவதில் இன்னும் தீவிரமாக முனைவார்கள்!



அவர்கள் தரையை தொடவிருந்த வினாடியில்-
ஙாங்!
முட்டாள் அந்த யானையை கலவரப் படுத்திவிட்டாயே!


சீற்றமடைந்த யானை, ஆர்ச்சியைப்பிடித்து சுழற்றி எறிந்தது
டமார்!
யியீயாயா ஆஆ..!
ஐயோ...ஆர்ச்சிக்கு ஆபத்து!
நாம்போய் உதவ முடியாத நிலை!
ஆர்ச்சியின் கட்டுமானத்தில் பழுது ஏற்படவே-
ஆயாஹீ...ஈஈ..!
ஏதோ கோளாறு-ஆர்ச்சி தறிகெட்டு பாய்கிறது!


ஹேய், ஆர்ச்சி
எங்கே ஓடு
கிருய்?
நில், நிதானமாக
நடந்து கொள்-
கம்ப்யூட்டர்
மூளையைபயன்
படுத்து!




யானையின் சீற்றம் அடங்கியதாக தெரியவில்லை...
டிரான்ஸ்மீட்டரை பயன்படுத்தி அவனைக்கட்டுப்படுத்த முயற்சிசெய். இந்த நிலையில் சூப்பரான்களிடம் அகப்பட்டுக் கொண்டோமோ, நம் கதைமுடிந்துபோகும்.
ஊஹூம் டிரான்ஸ் மீட்டரால் எந்தப் பயனுமில்லை!

மறுகணம்-
வா..வா .அருகே! கோலூன்றித் தாண்டும் ஆட்டம் ஆடப் போகிறது ஆர்ச்சி!
முட்டாள்தனமாக எதையாவதுசெய்து தொலைக்காதே!


ஆர்ச்சியை சுமந்து கொண்டு எங்கோ விரைகிறது அந்த யானை
நாம் மட்டும் இங்கே நின்ருல் ஆபத்தாகி விடும் வா.. பின் தொடர்ந்து ஓடுவோம்
ஏதாவது ஒரு கட்டி டத்தின் மீதுஏறி, யானை எங்கேதான் போகிறது என்று தெரிந்துகொள்வோம்
பிடிக்க முடியாது போலிருக்கிறதே'
இதற்கிடையே சூப்பரான் ஏஜெண்டுகளுக்கு தலைமை கண்ட்ரோலிலிருந்து உத்தரவு வந்துகொண்டிருந்தது
அன்னிய ரோபோ அழிக்கப்படவேண்டும் எங்கிருந்தாலும்தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டும்!
83



ஆர்ச்சி ஒளிந்திருக்கக் கூடும் என்று சந்தேகப்பட்ட இடங்கள் எல்லாம் குறிவைக்கப்பட்டன
அங்குலம் அங்குலமாக அலச வேண்டும
டமால்
ஏதாவது தெரிகிறதா?
அந்த மரங்களுக் கிடையேசலசலப்பு ஏற்படுகிறது ஆர்ச்சி அங்கே இருக்கலாம்!
திடீரென்று ஆபத்து சூழ்ந்து கொண்டது
ஐயோ சூப்ப ரான்ஏஜெண்டு!
முடிந்தது நம் கதை-கண்களை மூடிக் கொண்டுவிடு!
வகையாக மாட் டிக்கொண்டு விட்டோம்!
பதருதே- இன்னமும் நம் உயிர் போய்விட வில்லை எதற்காகவோ நம்மை உயிரோடுபிடித் துச்செல்ல நினைக்கின் றன...


தலைமை கண்ட்ரோலுக்கு..! அன்னிய ரோபோவின் சகாக்களை கைது செய்து விட்டோம்!
உத்தரவின்படி அவர்களை உயிரோடு கொண்டு வருகிறோம்!
நம்மை எங்கே கொண்டு செல்கின்றனவோ?
ஆர்ச்சி மட்டும் அருகே இருந்திருந்தால் நமக்கு இந்தக்கதி ஏற்பட்டிராது!
உங்களுடைய ரோபோ எங்கே? உண்மையை சொல்லாவிடில் சித்திர வதைப்பட்டு சாவீர்கள்!
எங்களுக்குத் தெரியாது! தெரிந்தாலும் சொல்ல மாட்டோம்!
உங்களால் எந்தப்பயனும் இராது என்று எங்களுக்குத்தெரியும்உங்களைபிணை கைதிகளாகவைத்துஅந்த ரோபோவை சரணடையச் செய்வதே எங்கள் நோக்கம்!
நடக்குமென்றுதோன்றவில்லை. ஆர்ச்சியின் இயக்கத்தில்பழுது ஏற்பட்டதால் அது தறி கெட்டுஎங்கோஅலைந்து கொண்டிருக்கிறது..!




கடைசியாக யானை தூக்கிஎறிந்த பள்ளத்தினுள் அனாதையாகக்கிடந்தது ஆர்ச்சி...
அதனிடம் எந்தச்சலனமும் இல்லை. தன் தோழர்கள் அங்கே மரணத்தின் நிழலில் தவித்துக்கொண்டிருப்பதை அறியாமல் பரிதாபமாக விழுந்துகிடந்தது...
ஆர்ச்சிஇல்லையேல் விக்டர் தாம்சன் இருவரும் உயிர் பிழைப்பதோ நிகழ்காலத்துக்கு திரும்புவதோ, சாத்தியமில்லை!



ஒரு சூப்பரான் ஏதோ ஒரு விசையை இழுத்தது—
லிப்ட் அமைப்பு மேலே ஏறி வருகிறது!
அடுதது என்ன செய்யப் போகிறார்களோ...
மறுகணம்—
ஐயோ- கூண்டினுள் அடைத்துவிட்டார்கள்....நம்மை!
இனி தப்பிக்கும் வாய்ப்பே இல்லை!
க்ளிக்!!


கூண்டு மேலே ஏற்றப்பட்டது...
ஆர்ச்சியை இங்கே வரவழைக்கும் சதித்திட்டம்இது.. வெகுதொலைவிலிருந்தாலும் ஆர்ச்சி நம்மைக்காணவே இந்த ஏற்பாடு!
எல்லா சூப்பரான் ஏஜெண்டுகளும் இங்கிருந்து உடனே விலகிச்செல்லவும் அழிவுக் கதிரை பாய்ச்சும் இயந்திரங்கள்தயார் நிலையில் இருக்கவும்.. அன்னிய ரோபோ தன் தோழர்களைவிடுவிக்க இங்கே வருவது உறுதி!
கால இயந்திரத்தில் பயணம் செய்தது சுத்த பைத்தியக்காரத்தனம். நாம்மறுபடியும்1987க்குத்திரும்பும் சாத்தியமே இல்லை!
அதையடுத்து கண்ட்ரோலிருந்து விஷமத்தனமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது-
உத்தரவு பெறப்பட்டது
அழிவுக்கதிர் பீரங்கிகள் மறைவிடங்களில் நிறுத்தப்பட்டன—
பார்த்தாயா அந்தபீரங்கியின் முழக்கத்தில் எதிரே இருந்த அத்தனையும் இருந்தஇடம்தெரியாமல் போனதை!
ஆர்ச்சிஎதிர்ப்பட்டாலும் இதே கதிதான் எப்படியாவது அவனை எச்சரிக்க வேண்டுமே!


ஒரு ஒலிபெருக்கி எச்சரித்தது...!.
எலெக்ட்ரோடுகளுக்கிடையே தொங்கிக்கொண்டிருக்கிறது கூண்டு. உரக்கக்கத்தினீர்களோ மின்சாரம் தாக்கப்பட்டு உடனே மாண்டு விடுவீர்கள்!
பூ விழுந்தாலும் தலை விழுந்தாலும் தோல்வி நமக்குத் தான் என்னும்படியான நிலை . !
இதற்கிடையே குறும்புக்கார குரங்குகள் ஆர்ச்சியின் உடம்பைத் தொட்டு ஆராய்ச்சி நடத்தின-
ஆர்ச்சியின் முதுகிலிருந்த பரிசீலனை திறப்பு திறந்துகிடக்கவே அதனுள் விரலால் அழுத்திப் பார்த்தது ஒரு குரங்கு-
அந்த பட்டனை அழுத்தியதும் ஆர்ச்சியின் மின் அடைப்பில் ஏற்பட்டிருந்த பழுது சரியாகி விட்டது-
ARCH
ஹ்ம்ம்ம்... !பரவாயில்லை தெம்பாக இருக்கிறது இப்போது!என்ன நடந்தது? தோழர்களை எங்கே காணோம்!
89



ஆர்ச்சியை இரகசியமாக தேடியலைந்தன சில சூப்பரான் எஜெண்டுகள்..
அன்னியரோபோ கண்ணில் படவில்லை



அந்தசமிக்ஞையை ஆர்ச்சியாலும்புரிந்துகொள்ளமுடிந்தது.
தோழர்களுக்கு ஆபத்து...! ஆர்ச்சிபோய் உதவ வேண்டும் உடனே!




இனி -செய்தியனுப்புவது முடியாது...! ஆவ் என்னைச் சுற்றிவளைத்து நெருக்கு கிறதே !
அதிரடித் தாககுதலில் திணறிப்போய் விட்டது-சைத்தான்
ஆண்டெனுக்களை நொறுக்கியது... ஆர்ச்சி—
ணங்!
ஜீவ மரணப்போராட்டம் நடந்தது— இரண்டு இயந்திர அமைப்புகளுக்குமிடையே!
ஆர்ச்சியேதான் மோர்ஸ் முறையில் செய்தியனுப்புகிறது- இங்கே வேகமாக வந்துகொண்டிருக்கிறதாம் !
கூண்டோடு கைலாசம் என்பார்கள். நிஜமாகவேஅப்படி நடக்கப் போகிறது. ஆர்ச்சியை பார்த்த மாத்திரத்தில் அழிவுக் கதிர் பீரங்கிகள் இயங்கப்போவது உறுதி!
ஆ..ஆ.. பிடி இறுகு முன் நழுவிக் கொண்டு விட்டால் தாஜுண்டு!
முடிவாக—
வெற்றி ஆர்ச்சிக்குத் தான்! முடிச்சு போட்டாயிற்று-இனி தோழர்களை தேடிச் செல்லவேண்டும்!



உரக்க குரல்கொடுத்து ஆர்ச்சியை எச்சரிக்க வும் முடியாது...
...மின்சாரம் தாக்கி மடிந்து விடுவோம்!
சூப்பரான் எஜெண்டுகள் தெருவெங்கும் தேடியலைந்தன...
அன்னிய ரோபோ எங்கே போய்த் தொலைந்ததோ
தேடிப் பிடித்து அழிக்க நமக்கு உத்தரவு!


சூப்பரான் ஏஜெண்டுகள் அங்கிருந்து அகன்றதும, அருகே பழுதடைந்து உபயோகத்தில் இல்லாமலிருந்த பஸ் ஒன்று மெள்ள நகரத்தொடங்கியது...
306
ஓட்டையாக உள்ள பஸ்ஸின் அடிப்பக்கத்தின் வழியாக கால்களை தரையில் ஊன்றி நடக்கிறது ஆர்ச்சி! அந்த சூப்பரான் ஏஜெண்டுகளுக்கு முட்டாள்பட்டம் கட்டிவிட்டது!


பின்னர்- வெகு உயரத்திலிருந்து நாற்புறமும் பார்வையை சுழல விட்டது ஆர்ச்சி...
ஓ ..அதோ கூண்டினுள் சிறைபட்டுக்கிடக்கிறார்கள்..! சரியாகப்படவில்லையே! எப்படி காப்பாற்றுவது அவர்களை! நிதானமாக சிந்திக்க வேண்டும்..!புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம்!


அதையடுத்து —
யானைகளுக்கிடையில்
இப்படி ஒளிந்துகொண்டு
பயணம்செய்தால்
யாருமே ஆர்ச்சியை
கண்டுகொள்ள முடியாது


அருகேஇருந்தஇராணுவ
மியூஸியத்தினுள்—
உலோகத்தினால் வில் தயா
ரித்துக்கொள்ள வேண்டும்!
பீரங்கி வண்டியை கிளப்
பிச் சென்று மிச்சத்தை
சாதிப்பது வெகு சுலபம்!




டாங்க் கிளம்பி விட்டது...
அவசரமாகசெல்லவேண்டியிருப்பதால் இந்த குறுக்குவழி! தோழர்களை எப்படியாது காப்பாற்றியாக வேண்டும்!
அங்கே கவனி ! ஒரு டாங்க் வருகிறது!
ஓ...! அது ஆர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் இங்கே அவனை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருக்கும் பேரபாயம் அவனுக்கு தெரிந்திருக்காது
மறைவில் காத்துநின்ற அழிவுக்கதிர் பீரங்கிகள் தானாகவே இயக்கம் பெற்று ஆர்ச்சியின் வண்டியை குறி வைத்தன...
ஆர்ச்சி அழிவிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பே இல்லை!



பாய்ந்தன...
டாங்க் அப்படியே உருகி உருக்குலைந்து விட்டது ஆர்ச்சியோடு... ஐயோ!
ஸஸஸ்ஸ்
அருகேயிருந்த ஆற்றில்—
டாங்க் போச்சு- ஆனல் ஆர்ச்சி பத்திரமாக இருக் கிறது இங்கே.சூப்பரான் களை ஏமாற்றிவிட்டது!
அழிவுக்கதிர் பீரங்கிகள் எங்கே நிற்கின்றன என்று இப்போது தெரிந்து விட்டது.. குறி வைப்பதில் ஆர்ச்சி பலே கில்லாடி!
96


விரைவில்-
அழிவுக்கதிர் பீரங்கிகள் அத்தனையும்காலி! ஆனா லும் ஆபத்து ஜோமுர் களைவிட்டு விலகிவிட்ட தாக சொல்லமுடியாது!
அங்கே சூப்பரான் தலைமை கண்ட்ரோலில்..
அன்னியரோபோவை அழித்த தற்கு பாராட்டுக்கள் உரித்தா குக இனியும்கைதிகளைவைத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. எப்படி மின்சாரத்தைபாய்ச்சிக் கொல்லவேண்டும் என்று உத் தரவு வரும்— காத்திருங்கள்!
உத்தரவு பெறப் பட்டது. தயாராக காத்திருக்கிறோம்!




தன் ஹீட்டர் அமைப்பை பயன் படுத்தி தீ மூட்டியது ஆர்ச்சி!
காய்ந்த புற்களை எரித்து புகைமண்டலத்தை உரு வகக்குகிறது ஆர்ச்சி...!
நம்மைக் கொல்ல ஏற்பாடு துரிதமாக நடந்துவருகிறது. ஆர்ச்சி காலம்கடந்துவந்து சேர்ந்து என்னபிரயோஜனம்?
அங்கே ஆர்ச்சி இருப்பதை சூப்பரான்கள் அறியமாட்டா. ஏதாவது சூழ்ச்சி பண்ணி காரியத்தை சாதிக்க ஆர்ச்சி திட்டமிட்டிருக்கலாம்!
98


புகை மண்டலத்தினூடே...
ஆர்ச்சியின் மார்பு அறையில் எப்போதும் இருக்கும் இந்த சுழல்-அறுவை சக்கரம் தோழர்கள் இருக்கும் கூண்டை கீழே கொண்டு வர உதவும்:


கராக்!
ஆர்ச்சியின் வேலை தான் இது. கேபிளை அறுத்து விட்டது அந்த விசை சக்கரம்!
இவ்வளவு உயரத்திலிருந்து விழுந்த பின்னும் நாம் முழு உருவமாக இருப்போம் என்று எதிர்பார்க்கிறாயா?



தோழர்களை கொல்ல மின் சாரம் பாய்ச்சப்பட்ட அதே கணத்தில்..
ஸ்ஸ்ஸ்!
நல்லவேளை - மயிரி ழையில் தப்பி விட்டோம்!
டெலஸ்கோப் கரங் களை நீட்டி ஆர்ச்சி கச்சிதமாக கூண்டை பிடித்துக் கொள்ளும்..
தன் ஜெட் அமைப்பை பயன்படுத்தி கையில் கூண்டோடு பறந்தது ஆர்ச்சி...! புகைமண்டலம் திரையாக நின்று மறைத்து உதவியது.
சூப்பரான்கள் முகத்தில் தந் திரமாக கரியைப் பூசி விட் டது ஆர்ச்சி!
விர்ர்ர்ர்...
படுபாவி... எத்தனை முறைதான் செத் துப்பிழைப்பது நாங்கள்?


தொலைவில், தரையிறங்கியதும்
எப்படி தப் பிழைய்...நீ?
வாருங்கள்—வெளியே .!
பேசிக்கொண்டு நிற்க அவகாசம் இல்லை...! நிலைமை மோசமாகு முன் விரைந்துசெய லாற்ற வேண்டும்—ஓடி வாருங்கள்!
வாஸ்தவம்தான்..! நாலா திசைகளிலும் இன்னேரம் அபாய எச்சரிக்கை ஒலி பரப்பப்பட்டிருக்கும்!
புகை மண்டலம் விலகியிருந்தது...
கண்ட்ரோலுக்கு—கூண்டோடு கைதிகள் மாயமாக மறைந்துவிட்டனர் அடுத்த நடவடிக்கை என்ன...!
கண்ட்ரோலிலிருந்துஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது..
அன்னிய ரோபோ எப்படியோ தப்பிப் பிழைத்து நம்மை முட்டாளாக்கி விட்டது. இலண்டன் நகர் முழுவதும் வலைவிசி அவர்களை தேடிக்கண்டுபிடித்து அழிக்கவும். சூப்பரான் ஆட்சிக்கு அவர்களால் அபாயம்வந்து விடலாம்என்றுஅஞ்சப்படுகிறது..





எல்லா சூப்பரான் ஏஜெண்டுகளும் நாலா திசைகளில் விரைந்து தேடத் தொடங்கின..
ஒரு மறைவிடம் பாக்கிவிடாமல் தேடவேண்டும்
காலதாமதம் கூடாது!
அவர்களா.. நாமா- பார்த்துவிட வேண் டும் ஒரு கை!
இதற்கிடையே —
தனியாருக்கு சொந்த மாக இருந்த சிறு விமானதளம் இது போலும்!
முட்டாள்தன மானயோசனை.!
இருபதாம் நூற்றாண் டைச்சேர்ந்த ஒருசிறு விமானம் அங்கேநிற் பது நம்அதிர்ஷ்டமே அதில் ஏறி நாம் தப் பிச்சென்று விடலாம்!
ஆர்ச்சிக்கு மகா கோபம்! யுத்தம் தொடங்க தீர்மா னித்துவிட்டது...! அந்த சைத்தான்களை ஒட்டு மொத்தமாக அழித்தாக வேண்டும்!
ஹே.. நம்மிடம் ஏது அதற்கான படைபலம்?



உரும்ம்ம்...
ரும்ம்ம்...
பொம்மை விமானத்தை பறக்கவிடுவது போல் ஏதோ செய்கிறான் பார்..... பயலுக்கு மறைகழன்று விட்டதா என்ன ?
எதிரிகளை ஏமாற்றும் சூழ்ச்சி இது! நீங்கள் இதனுள் இருப்பீர்கள் என்று சூப்பரான்கள் நம்புவார்கள்!
அதனால் என்ன ஆகப் போகிறது? சிறிதுகால அவகாசம் கிடைப்ப தால் பயன் என்ன?
பழைய வகை விமானம் ஒன்று மேலெழும்புகிறது! அதன் பாதையை மறித்து அழிக்கவும்!
ΓΓ இதோ...!


சட்டென்று ஒரு விநோத இடுக்கி வானை நோக்கி மேலெழும்பியது...
அதோ... ராட்சஸ இடுக்கி ஒன்று விமானத்தை கவ்வுகிறது.!
விமானத்தினுள் நாங்கள் இல்லை என்ற உண்மை விரைவில் சூப்பரான்களுக்கு தெரிந்துவிடும்


ஆர்ச்சி ஒரு டின்னை தூக்கி வந்தது...
திட்டமிடும் வேலையை ஆர்ச்சியிடம் விட்டுவிடுங்கள் தோழர்களுக்கு சிந்தனைசக்தி காணாது. சூப்பரான்களை சர்வ நாசம் செய்யப்போகிறது ஆர்ச்சி!


விமானம் அப்பளமாக நொறுங்கி விட்டது .
நாம் உள்ளே இல்லை என்ற உண்மை வெளிப்பட்டு விட்ட மாதிரிதான்...!
கராக்


விமானம் சிதறி உதிர்ந்தபோது எச்சரிக்கை செய்தி ஒலிபரப்பானது...
விமானத்தினுள் யாருமே இல்லை! அபாயம்..அபயாம்!
ரோபோவும் அதன் சகாக்களும் எங்கோ நழுவி விட்டனர்....
தேடிப்பிடித்து அழிக்கவும்!


டின்னைக்கட்டி கையில் எடுத்துக் கொண்டு விரைந்தது ஆர்ச்சி...
ஆர்ச்சி... விலகி ஓடிவா- சூப்பரான்தலைமைகண்ட் ரோல் நம்மைப் பார்த்து விட்டது—ஆபத்து!
மறுபடியும் ஆர்ச்சி தறிகெட்டுப் போய் விட்டது என்று தோன்று கிறது!
எதிரிகள் கண்டுபிடிக்கப் பட்டு விட்டார்கள்— அழிவுக்கதிர்களைப் பாய்ச்சிதொலைத்துக் கட்டவும்!
நீ சொல்வது போல் தான் தோன்றுகிறது தாம்சன்பயல் ஆபத்தை விலை கொடுத்து வாங்கு கிறான்!


விர்ர்ர்...
தோழர்கள் கலவரமடையத் தேவையில்லை...! இப்போது பாருங்கள்-- வேடிக்கையை!
ஆர்ச்சிவேண்டாம்- வந்துவிடு...! ஓடிப் போய்விடுவோம்!
கனமான அந்த 'பாணம் சரியாக இலக்கை குறிவைத்துச் சென்று தாக்கியது—
என்னால் நம்பவே முடியவில்லை!
க்ளீன் போல்ட்!
சாதித்து விட் டது..ஆர்ச்சி!



அப்போது ஏற்பட்ட பயங்கர வெடியினால் பூமி பலமாக அதிர்ந்தது ஒரு கணம்!
பூகம்பமே ஏற்பட்டு விட்டமாதிரி இருக்கிறது
நாமும் சேர்ந்து அழிந்துபோகாத வரை சரிதான்!
சூப்பரான்களின் விசை திறன்- மத்தியகேந்திரம்அழிந்து விட்டது!
அனைத்து சூப்பரான் ஏஜெண்டுகளும் இயக்கமிழந்து அப்படியே நின்று போயின...
பொது வேலை நிறுத்தம்போல் தோற்றமளிக்கிறதல்லவா.. ஹாஹ்ஹா!
மத்தியகண்ட்ரோல் சிதைக்கப்பட்டு விட்டதால் இனி இவைகள் காயலான் கடைக்குத்தான் கொண்டு செல்லத்தகும்!
கீழே தள்ளிவிட்டது ஆர்ச்சி
இலண்டன் விடுபட்டுவிட்டது—சூப்பரான்களின் ஆட்சி ஒழிந்தது! இனி போய் கைதிகளை விடுவிக்கவேண்டும்
ஆர்ச்சி பலே கில்லாடிதான்!
உண்மைதான்! அதன் சாமர்த்தியமும் செயல் திறனும் நிகரற்றவை!


இலண்டன் வாசிகள் சுதந்திரமடைந்தனர்!
அரக்கத்தனத்தின் ஆதிக்கம் அழிந்தது இன்று முதல் நாம் சுதந்திரப் பறவைகள்!
ஆர்ச்சிக்கு சவால் விட்டவர்கள் என்றைக்குமே நிலைத்ததில்லை.
உண்மைதான்...!
இலண்டனை மீட்டு உங்கள் வசம் ஒப்படைத்து விட்டது ஆர்ச்சி. ரோபோக்களை தேம்ஸ் நதிக்குள் அள்ளிப் போடுங்கள். அல்லது உடைத்து ஸ்பேர் பார்ட்ஸ் ஆக பயன்படுமா என்று பாருங்கள்!
ஹே...யோசித்து நிதானமாக பேசு நீயும் ஒரு ரோபோ மறந்து விடாதே!
புரட்சித் தலைவன் ஆர்ச்சி வாழ்க!
அஹ்...ஹா. ஹாஹ்...ஹா!


அழிவுக்கதிர் வீசும் அமைப்புகளை ஆர்ச்சியே இஷ்டப்படி நொறுக்கித்தள்ளியது...
இவற்றை அப்படியே மனிதர் களிடம் ஒப்படைக்கவும் ஆர்ச்சிக்கு இஷ்டமில்லை.. மனிதர்களிடையே சில கோணல் புத்திக்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.
ஆமாம்..! அவர்கள் இவற்றை தவருனவழி யில் பயன்படுத்திவிடும் சாத்தியமுண்டு எதை யும் உருப்படியாக விட்டு வைக்காதே— போட்டு நொறுக்கித் தள்ளு!
பயலுக்கு சில வேளைகளில் புத்தி திசைமாறிச் சென்று விடும் இங்கே வேறு ஏதா வது செய்கிறேன் பேர் வழி என்று இவன் கிளம்பு முன் கோட்டைக்குத் தள் ளிக் கொண்டு போய்விட வேண்டும்
எப்போது நம் காலமா கிய 1987க்கு திரும்பி, போய்ச் சேருவோம் என்று ஒரேபரபரப்பாக அடித்துக் கொள்கிறது எனக்கும்!
நினைவுச் சின்னமாக இவற்றைஅள்ளிச் செல்லவேண்டும் என்று ஆர்ச்சி வற்புறுத்தியது...
கட்டாயம் அவற்றை அள்ளிக்கொண்டுவரத் தான் வேண்டுமா? கோட்டையினுள் ஏற் கனவே இடவசதி காணுது!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண் : 34.
அச்சிட்டோர் : முத்து பைன்ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி-626123.

# வாசகர் கடிதம்!

● T. கார்த்திகை ராஜா,
விருத்தாசலம்.

பழி வாங்கும் பாவை கதை மிக அருமை! முன் அட்டைப்படம் தூள் புரட்சித் தலைவன் ஆர்ச்சி கதை அடுத்த வெளியீடு கண்டு மகிழ்ச்சியில் மிதந்தேன்!

● சு. சரவணக்குமார்,
கவுந்தப்பாடி.

டெக்ஸ் வில்லர் தோன்றும் பழி வாங்கும் பாவை கதை சூப்பர். டெக்ஸ் வில்லரின் திட்டங்கள் அருமை! கோடை மலர் எப்பொழுது வரும் என்று ஆவலாக உள்ளது.

● சௌந்தர்ராஜன்,
திருமுதுகுன்றம்

முன் அட்டையில் வில்லரும், நளியாவும் படு சூப்பர் முன் அட்டையை அலங்கரிக்கும் விதம் மிக மிக அருமை

● ஆர். முத்துக்குமார்,
அறந்தாங்கி.

''பழி வாங்கும் பாவை'' கதையை படித்தேன். கதை மிகவும் அருமையாக இருந்தது. கோடை மலரில் இத்தனை கதைகளா? ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!

● M. முகம்மது இஸ்மாயில்,
தென்காசி.

டெக்ஸ் வில்லர், கர்னல் அர்லிங்டனை இரவில் அவரது அறையில் சந்தித்துத் தாக்கி தனது மனக்கொந்தளிப்பை வெளிப்படுத்தும் இடம் பிரமாதம்! இது ஒரு நல்ல கதை. பாராட்டுக்கள்!

● N. நடராஜன்,
ஸ்ரீரங்கம்.

டெக்ஸ் வில்லர், லூயிஸ் கோட்டையை வெற்றி கண்ட முறையைப் படித்த போது நம் நாட்டு வரலாற்றில் ராபர்ட் கிளைவ் ஆற்காடு கோட்டையை வெற்றி கண்டது நினைவுக்கு வருகிறது.

● ஜ. இஸ்மாயில், தல்லாகுளம்
மதுரை-2.

காப்டன் ரேஞ்சர் போல் ஒரு சில நல்லவர்களுக்காக ஒரு சில நிபந்தனையுடன் ரத்தம் சிந்தாமல் போராடுவது டெக்ஸ் வில்லரின் திறமையை வெளிப்படுத்தி விட்டது. அடுத்த வெளியீடு புரட்சித் தலைவன் ஆர்ச்சியா படு சூப்பர்!

K. K. ஐயப்பன்,
கோவை 1.


டெக்ஸ் வில்லரின் போர் தந்திரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

● K. ராஜா, உத்தமபாளையம்.

''பழி வாங்கும் பாவை'' என் மனதில் நிலையான இடம் பெற்று விட்டது. இதுபோல் இன்னும் இருந்தால் அடுத்து வெளியிடுங்கள்!

● வெ. ஸ்ரீபாபு, துறையூர்-10.

பழிவாங்கும் பாவை கதை சூப்பர். தலைப்பு 'கிறுக்கு கர்னல்' என்று வைத்திருக்கலாம் அதிகார வர்க்கத்தின் கோணல் புத்திக்கு எடுத்துக் காட்டு கர்னல். கர்னலுக்கு ஏற்பட்ட முடிவு சரியான முடிவு.




எட்டு சூப்பர் சித்திரக் கதைகளுடன் வெளிவரும் கோடை மலர் ஏப்ரல் 15-ல் கிடைக்கும். விலை ரூ. 5/- உங்கள் பிரதிக்கு இன்றே அருகாமையில் உள்ள விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். கதை விபரம் அடுத்த இதழில்-

அடுத்த வெளியீடு!



ஸ்பைடர் தோன்றும்
மரண மாஸ்டர்!
ரூ. 2/-
ப்ளஸ்
லேடிஜேம்ஸ்பாண்ட்: மாடஸ்டி
தோன்றும்
விசித்திர சகோதரர்கள்
லயன்
காமிக்ஸ்

